# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

29.11.2019–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

120. அரசாணை எண் (MS) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( MA.IV) துறை நாள் 19.11.2019 ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1 நாள்.20.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும், அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .26.07.2018 ன் படி 01.04.2018 ம் தேதி முதல் சொத்து வரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு ( Zonal Rates ) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017 ம் தேதி முதல் சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement ) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1 ) அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

2 ) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் :1212 /2018/அ1 நாள் –22.11.2019

121. வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கடை எண்.32–க்கு 2019–2020 ம் ஆண்டில் ஒப்படைக்கும் நாள்முதல் 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023ம் ஆண்டில் மூன்றாண்டு குத்தகை உரிமம் முடியும் நாள் வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு 22.11.2019–ல் நடைபெற்ற பொது ஏலம் விபரங்களை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**விபரம்**

புதிய பேருந்து நிலையம் கடை எண்.32, ஏலம் நாள்.22.11.2019

1.திரு.இளங்கோவன், ஏலம் – மாதவாடகை ரூ.4600 . 00

2.திரு.S.செல்வி, ஏலம் – மாதவாடகை ரூ.4700. 00

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. ஏற்கனவே பலமுறைகள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வராததால் நகராட்சி வருவாய் வரத்தக்க இனம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.32–க்கு வருவாய் இனம் அவசரம் அவசியம் கருதி உயர்ந்த பட்சம் ஏலத்தொகை ரூ.4700/–என ஏலம் கேட்டுள்ள திருமதி.S.செல்வி, என்பவருடைய ஏலத்தொகையை மன்றம் ஏற்கலாம்.
3. குத்தகை இனம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.32க்கான வருவாய் வரவினம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன்அனுமதி பெற்று ஏலதாரர் திருமதி.S.செல்வி, அவர்களுக்கு உரிமம் வழங்கவும்,

குத்தகை உரிமம் முதலாம் ஆண்டு குத்தகை தொகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.0924/2004/அ1, நாள்.22.11.19)

122. வந்தவாசி நகராட்சி பொதுப்பிரிவில் பயன்படுத்திவரும் கணினியில் டோனர் 278ஏ மற்றும் 88ஏ டோனர்கள் காலியாக உள்ளதால், தற்போது 2019–உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளதாலும், அது சம்மந்தமாக சுற்றறிக்கை G.O.க்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்,திருவண்ணாமலை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களிடம் இருந்து வரப்பெறும் சுற்றறிக்கைகளை உடனுக்குடன் எடுத்து பதில் அனுப்பப்பட உள்ளதால் அவசரம் அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான AA எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான AA எண்டர்பிரைசஸ் சென்னை அவர்களிடம் வாங்கி கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

(ந.க.எண்.1262/2019/எச்1, நாள்.26.11.19)

123.வந்தவாசி நகராட்சியில் **அலுவலக பணியாளர்** வருகையை பதிவு செய்யும் கருவி (Biometric machine)ஐ அவசரம் அவசியம் கருதி சப்ளை செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வந்து பயன்பாட்டில் உள்ள Bio metric machine சப்ளை பெற்ற வகையில் செலவினம் ரூ.49,288/–ஐ மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியாளர்களின் நலன் கருதி, நிர்வாக நலன் கருதி Bio metric machine அவசியம் கருதி சப்ளை பெற்ற வகையில் செலவினம் ரூ.49,288/–மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1215/2019/அ1, நாள்.31.10.19)

124.வந்தவாசி நகராட்சி அலுவலகத்தின் **பொதுசுகாதாரப்பிரிவு வருகை** பதிவு செய்யும் கருவி (Biometric machine)ஐ அவசரம் அவசியம் கருதி சப்ளை செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வந்து பயன்பாட்டில் உள்ள Bio metric machine சப்ளை பெற்ற வகையில் செலவினம் ரூ.49,288/–ஐ மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியாளர்களின் நலன் கருதி, நிர்வாக நலன் கருதி Bio metric machine அவசியம் கருதி சப்ளை பெற்ற வகையில் செலவினம் ரூ.49,288/–மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1216/2019/அ1, நாள்.31.10.19)

125. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் கணினி பிரிவுக்கு (Cash பிரிவுக்கு) Det matric Printer (withups) ஒன்று அவசரம் அவசியம் கருதி உடன் சப்ளை பெற்று பயன்பாட்டில் உள்ளது. மேற்படி Det matric Printer சப்ளை செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.49,319/– செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியின் நலன் கருதி, நிர்வாக நலன் கருதி Det matric Printer அவசியம் கருதி சப்ளை பெற்ற வகையில் செலவினம் ரூ.49,319/–மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1215/2019/இ1, நாள்.31.10.19)

**126.**வந்தவாசி நகராட்சியின் வளர்ச்சி திட்டப் பணிகளின் விவரங்களை வரி செலுத்த பொதுமக்களுக்கு விளம்பரம் மற்றும் அறிவிப்பு செய்தமைக்கு விளம்பர கட்டணம் கீழ்குறிப்பிட்ட விவரப்படி வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. Kal Publication (P) Ltd., – 9975 .00

2.The Daily Thanthi –16,800.00

**<u>அலுவலககுறிப்பு–</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. அவசரம் அவசியம் கருதி வளர்ச்சி திட்டப்பணிகள் விளம்பரம் செய்தது விளம்பர கட்டணம் முறையே 1. ரூ.9,975/– 2. ரூ.16,800/– வழங்கியது மன்றம் அனுமதி வழங்குதல்.

(ந.க.எண்.1762/2019/இ1, நாள்.11.11.19)

**127.**வந்தவாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN25/BX/1193 TATA ACE பின்பக்கம் டயர் பழுதாகி உள்ளதால் அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் வாங்கி கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

மன்றம் அனுமதி அளித்தல்.
அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் செலவினம் ரூ.2200/–மேற்கொண்டது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். /2019/எச்1, நாள்.10.10.19)

**128.**வந்தவாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN25/Z/6509 செல்ப் மோட்டார் பழுதடைந்து உள்ளதை அவசரம் அவசியம் கருதி பழுதுபார்த்தவகையில் தொகை ரூ.3530/– செலவினம் மேற்கொண்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு–</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.
அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் செலவினம் ரூ.3530/–மேற்கொண்டது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1695 /2019/எச்1, நாள்.24.10.19)

**129.**வந்தவாசி நகராட்சியில் கடும் வறட்சி காரணமாக குடிநீர் வழங்குவதில் மிகவும் சிரமமாக உள்ளதால் சுகநதி ஆற்றுபடுகையில் உள்ள கிணற்றில் இருந்து மின் மோட்டார் இயக்கி குடிநீர் விநியோகம் செய்ய ஏப்ரல் 2019 முதல் செப்டம்பர் 2019 முதல் மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது கூடுதலாக அக்டோபர் 2019 ஒரு மாதத்திற்கு மட்டும் தொடர்ந்து மின்மோட்டார் இயக்கி குடிநீர் விநியோகம் செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு—</u>**

1.மன்றம் ஒப்புதல் வழங்குதல்

2.குடிநீர் அவசரம் அவசியம் கருதி அக்டோபர்—2019 ஒருமாதத்திற்கு மட்டும் மோட்டார் இயக்கியதற்கு தொகை ரூ.7750/—வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு வழங்குதல்.

(ந.க.எண்.697 /2019/இ1, நாள்.04.11.19)

130.வந்தவாசி நகராட்சியில்சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்துவரும் திரு. இயேசுதாஸ் மற்றும் திரு.லோகநாதன் ஆகிய இருவருக்கும் அலுவலக பயன்பாட்டிற்கு தொலைபேசி வாங்கிகொள்ள முன்பணம் தலா ரூ.10,000/— (பத்து ஆயிரம் மட்டும்) வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு—</u>**

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதியும், சுகாதார மேற்பார்வையாளர்கள் தலா ரூ.10,000/—வீதம் இரண்டு பேருக்கு மொத்தம் ரூ.20,000/— வழங்கியது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.2842 /2019/எச்1, நாள்.13.11.19)

131.வந்தவாசி நகராட்சி ஆணையர் அவர்கள் பயன்படுத்தும் கைபேசி எண். ஏர்டெல் நெ.7397389330 மற்றும் ஐடியா நெ.9087309920 ஆகிய இரண்டு கைபேசிகளுக்கு கட்டணம் ரூ.3620/— செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு—</u>**

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.அவசரம் அவசியம் கருதி இரண்டு கைபேசி எண்களுக்கு கட்டணம் ரூ.3620/— செலவினம் மேற்கொண்டது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். /2019/இ1, நாள்.26.11.19)

132.வந்தவாசி நகராட்சியில் ஆணையாளர் அறைக்கு அவசரம் அவசியம் கருதி, நிர்வாக நலன் கருதி மின்விசிறி ஒன்று வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.2700/— மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு—</u>**

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி மின்விசிறி ஒன்று வாங்கியது செலவினம் ரூ.2700/— செலவினம் மேற்கொண்டது மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண். /2019/எச்1, நாள்.11.11.19)

133.வந்தவாசி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையாளர் அவர்கள் பயன்படுத்திவரும் வாகனம் TN25/AT/4378—ன் AC பழுதாகி உள்ளதை அவசரம் அவசியம் கருதி பழுது பார்க்கப்பட்டது செலவினம் தொகை ரூ.11600/— மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு—</u>**

1.மன்றம் பதிவு செய்தல்.

2.அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி வாகனம்

TN25/AT/4378–ன் AC பழுது பார்த்தது தொகை ரூ.11600/– மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். 2841/2019/இ1, நாள்.15.11.19)

134.வந்தவாசி நகராட்சியில் பணிபுரியும் திரு.எஸ்.ராமமூர்த்தி என்பவருக்கு மாசற்ற முறையில் ஓட்டுனர் பணிபுரிந்தமைக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. தங்கப் பதக்கம் பெறுவதற்கு கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.750/–ஐ வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.ஓட்டுனர் மாசற்ற முறையில் பணிபுரிந்தமைக்கு தங்கப்பதக்கம் பெறுவதற்கு கூடுதலாக வழங்கிய தொகை ரூ.750/– வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். 1321/2019/எச்1, நாள்.25.11.19)

135.வந்தவாசி நகராட்சியில் உள்ள வாக்குசாவடி மையங்களுக்கு வாக்குசாவடியின் எண்கள் 1 முதல் 24 வரையிலான வாக்குச்சாவடியின் மையங்களுக்கு பெயிண்டிங்கால் எண்கள் எழுதப்பட்டதற்கு செலவினம் ரூ.4500/– மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.அவசரம் அவசியம் கருதி தேர்தல் அவசியம் என்பதால் செலவினம் ரூ.4500/– மேற்கொண்டது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். /2019/இ1, நாள்.28.11.19)

136.வந்தவாசி நகராட்சி பகுதியில் தற்பொழுது பருவமழை தொடங்கப்பட்ட நிலையில் டெங்கு மற்றும் மர்மகாய்ச்சல் நிகழ்வு காணப்படுவதால் வந்தவாசி நகர் பகுதியில் உள்ள 24 வார்டுகளிலும் வீடு வீடாக கொசு புழு ஒழிப்பு பணிக்கு புகை மருந்து வீட்டின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் ஆய்வு பணி செய்திட காலிமனை ஆய்வு செய்திட நோய்பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழித்தல் டெங்கு நோய் உள்ளிட்ட தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மஸ்துார்கள் தற்காலிகமாக 45 எண்ணிக்கையில் செய்யாறு சுகாதார இணை இயக்குநர் நேரில் ஆய்வு செய்து நவம்பர்–2019, டிசம்பர்–2019 ஆகிய 2 மாதங்கள் நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வந்தவாசி நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டு 45 நபர்கள் டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணிக்கு பணி அமர்த்திக்கொள்ளவும் தனியர்களை 01.11.2019 முதல் 31.12.2019 வரை இரண்டு மாதங்களுக்கு பணி அமர்த்தி நோய் தாக்கத்தை இணை இயக்குநர் நேரடி ஆய்வில் கூறியப பணி அமர்த்திடவும், அதற்க உண்டான செலவு செய்யாறு சுகாதார மாவட்ட துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.2833 /இ4/2013–ன்படி, நாள்.21.07.2016ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் ஒரு பணியாளர்க்கு வழங்கவும் ரூ.6.00 (ஆறு இலட்சத்திற்கு) மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 209/2019/எச்1, நாள்.15.11.19)

137.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பூமாலை குளத்தில் விநாயகர் சிலையை கரைப்பதற்காகவும், ஊர்வலமாக எடுத்து செல்லும் வழியில் 400 வாட்ஸ் Focus Light Diesel Engine , மரதடுப்பு, மரகோபுரம், மற்றும் தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு–பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

1. ஆர்.கோவிந்தன் 0.42 % சதவீதம் மதிப்பைவிட குறைவு

2. என்.திருநாவுக்கரசு 5.96% சதவீதம் மதிப்பைவிட அதிகம்

3.வி.சுந்தரம் 3.61% சதவீதம் மதிப்பைவிட அதிகம்

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.0.42% சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிக் கொடுத்துள்ள ஆர்.கோவிந்தன் அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். /2019/எச்1, நாள். .11.19)

138. வந்தவாசி நகராட்சி பகுதி வார்டு –E, பிளாக்–6, நகரளவு எண்.1/1. –1 .00 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பிற்கான தொழில்நுட்ப அனுமதி நகர்ஊர் அமைப்புத்துறை துணை இயக்குநர் வேலூார் அவர்களால் ந.க.எண்.6150/2018/வேம3, நாள். 08.19–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, மனை உரிமைதாரார் மேற்படி சாலைகள் மற்றும் பூங்காவிற்கான இடங்களுக்கு தானபத்திரம் எழுதி நகராட்சி ஆணையருக்கு சமர்பித்துள்ளார். ஆவண எண்.3960/2019 வந்தவாசி சார் பதிவாளர் அலுவலகம், மேலும் சாலைகளை தார் சாலைகளாக அமைத்துள்ளார்கள். மேற்படி தானபத்திரம் மூலம் அளிக்கப்பட்டுள்ள சாலைகளையும், பூங்கா இடத்தையும் ஏற்று, மன்றம் அனுமதி வழங்கலாம். மீளவும், மேற்படி விபரத்தை நகர்ஊர் அமைப்பு துணை இயக்குநர், வேலூார் அவர்களுக்கு வரைவு கடிதம் மூலம் அனுப்பலாம்.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 559/2018/நஅஆ, நாள்.18 .11.19)

139. வந்தவாசி நகராட்சியில் குடிநீர் நிதி மற்றும் பொதுநிதி 2019–2020 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | குடிநீர் நிதி மற்றும் பொது நிதி –2019 – 2020 | |
| 1. | வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் செய்யாறு அருகே அனக்காவூரில் உள்ளது. பழைய Water Supply schemeல் உள்ள Panel Board இயங்கவில்லை புதியதாக Panel Board அமைக்கும் | 2.00 |

| | | |
|---|---|---|
| | பணிக்கு | |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான Composite Yard-ல் குப்பைகளை அப்புறப்படுத்தி, நிலப்பரப்பை சுத்தம் செய்து, FSTP கட்டுமான பணிக்கு தகுந்தவாறு அமைத்து கொடுக்கும் பணி | 3.60 |
| 3. | வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள Under Ground Cable பழுதடைந்துள்ளதை அடுத்து புதியதாக கேபிள் பதிக்கவும், கூடுதலாக LFD – Focus Light பொருத்தும் பணி | 3.85 |
| 4. | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பழைய RCC Roof கட்டிடத்திற்கும், மதில் சுவர்களுக்கும் வெள்ளை மற்றும் கலர் அடித்தல் மற்றும் கதவு, ஜன்னல்களுக்கு புதிய பெயின்ட் அடித்தல் பணி மற்றும் கழிவறைகள் மராமத்து பணி. | 1.00 |
| 5. | வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில், வலது மற்றும் இடது புறங்களில் அமைக்கப்பட்டுள்ள பேனல் போர்டு டிரான்பர்மார் பழுது ஏற்பட்டுள்ள நிலையில், புதியதாக மாற்றி அமைக்கும் பணி | 1.80 |
| 6. | வந்தவாசி நகராட்சி அலுவலக வளாகம் உள் பகுதியில் நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பிரிவில் அலுவலக ஆவணங்களை பாதுகாக்க மற்றும் பராமரிக்கவும், கணினி சாதனங்களை பொருத்த ஒரு சிறிய அறை flywood wall Pannelled மூலம் அமைக்கவும் மற்றும் அலுவலகத்தில் உள்ளே Sliding windows பழுது நீக்கல் பணி. | 4.00 |
| 7. | வந்தவாசி நகராட்சி அலுவலக முதல் மாடியின் பகுதியில் உள்ள நகரசபை ஹால் பகுதியில் புதிய இருக்கைகள், குளிர்சாதனபெட்டிகள், ஜன்னல்கள் சரிசெய்து அமைக்கும் பணி | 6.00 |
| 8. | வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு–11 –மக்தும் மரைக்காயர் 2வது சந்து தெரு, வார்டு–6, KSK நகர், வார்டு–19, லஷ்மிநகர், வார்டு–18 பெரிய புது காலனி மற்றும் பெரிய காலனி ஆகிய ஐந்து பகுதிகளில்சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய சிறுபாலங்கள் அமைக்கும் பணி. | 6.00 |
| 9. | வந்தவாசி நகராட்சி வார்டு–17 காமராஜ் நகர் பகுதியில் புதியதாக பைப்லைன் அமைக்கும் பணி. | 4.50 |
| 10. | வந்தவாசி நகராட்சி அச்சரப்பாக்கம் சாலை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பணிக்கு புதியதாக இரும்பிலான Staircase அமைக்கும் பணி, | 5.00 |
| 11. | வந்தவாசி நகராட்சிக்கு உட்பட்ட ஆடுஅறுக்கும் தொட்டி பராமரிப்பு பணி. | 4.50 |
| 12. | சுகநதி ஆற்றுப்படுகையில் உள்ள திறந்தவெளி கிணறுகளுக்கு இரும்பிலான பாதுகாப்பு கவர் சிலாப் மற்றும் இரவு காவலாளி அறைக்கு மின்பணிகள் மேற்கொள்ளுதல் பணி. | 1.25 |

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 860 /2019/இ1, நாள்.25.11.2019**

140.வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்க ''B'' லைசென்ஸ் புதுபிக்கும் பொருட்டு Regional Transport Officer ஆய்வு மேற்கொண்டு, குறைகளை சுட்டிக்காட்டியுள்ளதை நிவர்த்தி செய்ய, பயணிகள் காத்திருப்பு அறையில் 3 Seated United chairs-6 எண்கள் கொள்முதல் செய்து பொருத்திய வகையில் ஏற்பட்ட செலவினம் ரூ.48,852/– அவசிய அவசர காரணங்களால் பிரிவு–15ல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலும் அனுமதியும் கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1831 /2019/இ1, நாள்.15.11.19)

141. வந்தவாசி நகராட்சியில் குடிநீர் நிதி மற்றும் பொதுநிதி 2019–2020 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | **குடிநீர் நிதி மற்றும் பொது நிதி –2019 – 2020** | |
| 1. | வார்டு எண்.1 முதல் 24 வார்டு வரையில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய குளோரின் கலந்து குடிநீர் வழங்க, சோடியம் லிக்யுடு குளோரின் கொள்முதல் செய்து வழங்கும் பணி. | **5.00** |
| 2. | வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேல்மருவத்துார் சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை அருகே உள்ள உயர்மின்கோபுர விளக்குகளை சரிசெய்து அமைத்தல் பணி | **3.00** |

<u>அலுவலககுறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 860 /2019/இ1, நாள்.26.11.2019**

142. வந்தவாசி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதி 2019–2020 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி –2019 – 2020** | |
| 1. | வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் பூங்காவிற்கு காவலர் அறை மற்றும் நடைபாதை வசதி செய்தல் | **8.05** |
| 2. | வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் பூங்காவிற்கு பேவர் ப்ளாக் மற்றும் இருக்கை வசதிகள் செய்தல் | **9.10** |
| 3. | வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் பூங்காவிற்கு விளக்கு வசதிகள் செய்தல் | **3.85** |
| 4. | வந்தவாசி நகராட்சி 23வது வார்டு பொட்டிநாயுடு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி. | **4.75** |

<u>அலுவலககுறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 843 /2019/இ1, நாள்.26.11.2019**

143.வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் பணிக்கு பயன்படுத்தி வரும் வாகனம் TN25/AW/3066 தகுதி சான்று காலம் முடிவடைந்து விட்டதால் அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாகனத்தை பழுதுபார்த்து கொள்ளவும், அனைத்துப்பணிகளும் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு ரூ.2,20,000/– மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் நலன் கருதி TN25/AW/3066 வாகனத்தை பழுது பார்த்து கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,20,000/– மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1353 /2019/எச்1., நாள்.10.07.2019 )

144.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் உள்ள LED தெருவிளக்குகளில் பழுதடைந்துள்ளதற்கு Choke–களை மாற்றி புதிய Choke–கள் வாங்கி பொருத்தும் பணிக்கு மதிப்பு ரூ.1,17,500/– பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

| | | | |
|---|---|---|---|
| 1.ஆர்.கோவிந்தன் | – | 0.24 | சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 2.என்.திருநாவுக்கரசு | – | 3.13 | சதவீதம் மதிப்பைவிட அதிகம் |
| 3.வி.சுந்தரம் | – | 8.43 | சதவீதம் மதிப்பைவிட அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.0.24 சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிக் கொடுத்துள்ள ஆர்.கோவிந்தன்அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். /2019/இ1., நாள். 06 .08.2019)

தனி அலுவலர்(ம) ஆணையாளர்,
வந்தவாசி நகராட்சி